TENNECO CLEAN AIR INDIA LIMITED
(formerly known as Tenneco Clean Air India Private Limited)
CIN: L29308TN2018FLC126510
Telephone: +2135 612501/506
Email: Tennecoindiainfo@tenneco.com
Website: www.tennecoindia.com

Date: August 3, 2026

To	To
National Stock Exchange of India Limited	BSE Limited
Exchange Plaza, C-1, Block G	Phiroze Jeejeebhoy Towers
Bandra Kurla Complex,	Dalal Street,
Bandra (E), Mumbai – 400051	Mumbai – 400001
Scrip Symbol: TENNIND	Scrip Code: 544612

Subject: Intimation under Regulation 30 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ('Listing Regulations')

Dear Sir/Madam,

Pursuant to Regulation 30 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, please find enclosed copy of the Notice for the attention of the shareholders of the Company in respect of information regarding 8th Annual General Meeting of the Company to be held on Friday, August 28, 2026 at 4:00 P.M. (IST) through Video Conferencing ('VC') or Other Audio Visual Means ('OAVM') published in the following newspapers:

1. The Financial Express; and
2. Makkal Kural

You are requested to kindly take the same on record.

Sincerely,
For **Tenneco Clean Air India Limited**

ROOPALI SINGH
Digitally signed by ROOPALI SINGH
Date: 2026.08.03 17:55:30 +05'30'

Roopali Singh
Company Secretary and Compliance Officer
Membership No: A15006

Place: Gurugram

Encl: as above

தமிழகத்திற்கு ரூ.4,466 கோடி வரிப்பகிர்வு தொகையை விடுவித்தது மத்திய அரசு

உத்தரபிரதேச மாநிலத்துக்கு ரூ.19 ஆயிரத்து 208 கோடி

புதுடெல்லி, ஆக.2

மாநிலங்களுக்கு நிதிப்பகிர்வின் கூடுதல் தவணையாக ரூ.1,09,019 கோடியை மத்திய அரசு நேற்று விடுவித்து உள்ளது. இதன்படி தமிழகத்துக்கு ரூ.4,466 கோடியும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசு தனது வரிவசூலில் மாநிலங்களுக்கான 41 சதவீத பங்கை ஒவ்வொரு மாதமும் 10ந் தேதி அல்லது அதன் முன்னும், பின்னும் வழங்கும். சில நேரங்களில் முன்கூட்டிய தவணையாக கூடுதல் நிதிப்பகிர்வையும் அளிக்கும்.

இதன்படி இந்த ஆகஸ்டு மாதத்துக்கான நிதிப்பகிர்வை முன்கூட்டிய கூடுதல் தவணையாக நேற்று விடுவித்து உள்ளது. மொத்தம் ரூ.1 லட்சத்து 9 ஆயிரத்து 19 கோடி விடுவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிதிப்பகிர்வில் பெரிய மாநிலமான உத்தரபிரதேச மாநிலத்துக்கு அதிகபட்சமான நிதி கிடைக்கிறது. இந்த மாநிலத்துக்கு ரூ.19 ஆயிரத்து 208 கோடி வழங்கப்படுகிறது.

இதற்கு அடுத்தபடியாக, பீஹாருக்கு ரூ.10,845 கோடியும், மத்திய பிரதேசத்திற்கு ரூ.8,010 கோடியும், மேற்கு வங்கத்திற்கு ரூ.7,866 கோடியும், மஹாராஷ்டிராவுக்கு ரூ.7.022 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ.6,460 கோடியும், ஒடிசாவுக்கு ரூ.4,819 கோடியும், ஆந்திராவுக்கு ரூ.4,597 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு ரூ.4 ஆயிரத்து 466 கோடி கிடைக்கிறது. ஒடிசா மற்றும் கர்நாடகத்துக்கு தமிழ்நாட்டைவிட அதிக நிதிப்பகிர்வு கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதி வெளியீடு, மாநிலங்களின் மூலதன மற்றும் வளர்ச்சிச் செலவினங்களை விரைவுபடுத்துவதற்காகவும், அவற்றின் நிதியை வலுப்படுத்தும் இந்திய அரசின் உறுதிப்பாட்டுக்கு இணங்க இருப்பதாகவும் நிதி அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

சேக்கிழார் ஆராய்ச்சி மையம் மற்றும் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவம், ஆராய்ச்சி பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய 34–ம் ஆண்டு தெய்வச்சேக்கிழார் விழா

தருமையாதீன பன்னிரு திருமுறைகள் நூலின் முதல்பிரதியை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெற்றுக்கொண்டார்

சென்னை, ஆக.2

சேக்கிழார் ஆராய்ச்சி மையம் மற்றும் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் இணைந்து நேற்று நடத்திய 34ம் ஆண்டு தெய்வச்சேக்கிழார் விழாவில், சிவாலயம் பதிப்பித்த தருமையாதீன பன்னிரு திருமுறைகள் மற்றும் வெள்ளிமாலைக் கவிராயர் அருளிய திருச்செந்தூர் தலபுராணம் உரையுடன் நூல்கள் வெளியிடப்பட்டன.

இதில் தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமி கலந்துகொண்டு நூல்களை வெளியிட்டார். நூலின் முதல்பிரதியை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெற்றுக்கொண்டார்.

விழாவில் வேளாக்குறிச்சி ஆதீனம் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமி, சேக்கிழார் தலைவர் நீதிபதி எஸ்.ஜெகதீசன், செயலாளர் சிவாலயம் ஜெ.மோகன், திருமயிலை ரசிக ரஞ்சினி சபா தலைவர் ஏ.ஆர்.சந்தானகிருஷ் ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர். நூல்களின் முதல்பிரதியை பெற்றுக்கொண்ட பின்னர் மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் பேசும்போது, 'ஓலைச்சுவடிகள், செப்பேடுகளில் இருந்த திருமுறைகள் இப்போது நாகரிக மாற்றத்துக்கு ஏற்ப செயலிகளில் (ஆப்) வந்துவிட்டன.

ஓலைச்சுவடி, செப்பேடுகளில் இருக்கிறது படியுங்கள் என இளைஞர்களிடம் சொன்னால் அது தெரியாது என்பார்கள். ஆகவே செயலி வாயிலாக அவர்களிடம் பன்னிரு திருமுறைகளை கொண்டு சேர்த்திருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறேன். பிரதமர் மோடி தலைமையிலான அரசு, தமிழகத்துக்கும்,தமிழ் முறைகளுக்கும் பலவிதமான கவுரவங்களை செலுத்தி வருகிறது' என்றார்.

மருத்துவ படிப்பில் சேர்வதற்கான கலந்தாய்வு 4ந்தேதி தொடங்குகிறது

மத்திய மருத்துவ கவுன்சில் அறிவிப்பு

சென்னை, ஆக.2

'நீட்' தகுதி மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ படிப்பில் சேர்வதற்கான கலந்தாய்வு 4ந்தேதி தொடங்கி நடைபெறும் என்று மத்திய மருத்துவ கவுன்சில் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் எம்.பி.பி. எஸ்., பி.டி.எஸ். மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வில் பங்கேற்க tnmedicalselection.org என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என மருத்துவக் கல்வி இயக்குனரகம் அறிவித்து இருந்தது. அதன்படி கடந்த 23ந்தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டு 70 ஆயிரத்து 486 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

மேலும் விண்ணப்பிக்க கடந்த 26ந்தேதி காலை 10 மணி முதல் 27 ந்தேதி பிற்பகல் 3 மணி வரையில் கூடுதல் அவகாசம் அளிக்கப்பட்டது. இதில் 2,141 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அந்த வகையில் மொத்தம் 72 ஆயிரத்து 627 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

மருத்துவ படிப்பில் சேர்வதற்கான கலந்தாய்வு எப்போது நடைபெறும் என்று விண்ணப்பித்த மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இந்த நிலையில் நாடு முழுவதும், 'நீட்' தகுதி மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் எம்.பி.பி.எஸ்., பி.டி. எஸ்., படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான பட்டியலை மருத்துவ கவுன்சில் வெளியிட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்ட அகில இந்திய மருத்துவ கலந்தாய்வு வருகிற 4ந்தேதி தொடங்கி 17ந்தேதி வரை நடைபெற உள்ளது. மாநில அளவிலான கலந்தாய்வு வருகிற 13 ந்தேதி தொடங்கி 22ந்தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 4 கட்ட கலந்தாய்வு மற்றும் மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கான கால அவகாசம் அக்டோபர் 10ந்தேதி வரை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரையில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பித்துள்ள 72 ஆயிரத்து 627 மாணவர்களின் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தரவரிசை பட்டியல் விரைவில் வெளியிடப்பட்டு கலந்தாய்வு அட்டவணையை மருத்துவ கல்வி இயக்ககம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி, செய்தி மற்றும் விளரம்பத்துறை அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் அ.அருண் தம்புராஜ் மற்றும் செய்தித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.